In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| Ele.O.P.No.36/2022 | Deposition of Witness: C.W.6 |
| Name: T.Selvam | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 27-03-2025.

முதல் விசாரணை :

முன்னாள் படைவீரர் நலத்துறை, திண்டுக்கல்லில் நல அமைப்பாளராக நான் பணியாற்றி வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து கண்காணிப்பாளர்/ உதவி இயக்குநர், முன்னாள் படைவீரர் நலத்துறைக்கு அழைப்பாணை வந்திருந்தது. அவர் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க அங்கீகார கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார். அந்த கடிதம் Ex.C.18. 23.08.2023 ம் தேதி ஜீவானந்தம் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கொடுக்கப்பட்ட மனுவை கொண்டுவந்துள்ளேன். அந்த மனு Ex.C.19. அந்த மனுவிற்கு 29.08.2023 ம் தேதியன்று எங்களது அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட தகவல்களை கொண்டுவந்துள்ளேன். அந்த தகவல்கள் Ex.C.20. 18.10.2023 ம் தேதி ஜீவானந்தம் அனுப்பிய மேல்முறையீடு கொண்டுவந்துள்ளேன். அந்த மனு Ex.C.21. 16.11.2023 ம் தேதி RTIN.1/2023 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் அனுப்பிய பதில் கொண்டு வந்துள்ளேன். அது Ex.C.22. 05.02.2019 ம் தேதி இறந்துபோன வேலுச்சாமியின் பென்சன் புத்தகம், ஓய்வூதிய ஆணை மற்றும் விதவை அடையாள அட்டை, வேலுச்சாமியின் இறப்புச்சான்றிதழ், முன்னாள் படைவீரர் சான்று ஆகியவற்றை கொண்டுவந்துள்ளேன். அவைகள் Ex.C.23 வரிசை.

3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை- வழக்குரைஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் ஆஜரில்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.03.27 16:25:03 +0530

Principal District Judge,
Dindigul.